# பிரார்த்தனை

தொகுப்பு:
கலாநிதி அப்துல் முஹ்ஸின் பின் முஹம்மத் அல் காசிம்
மஸ்ஜித் நபவிய்யின் கதீப் மற்றும் இமாம்

# பிரார்த்தனை

(துஆ)

புத்தகத்தைப் பதிவிறக்க, ஐகானின் மேல் உங்கள் கேமராவை ஸ்லைடு செய்யவும்

a-alqasim.com

# பிரார்த்தனை

## (துஆ)

தொகுப்பு:

**கலாநிதி அப்துல் முஹ்ஸின் பின் முஹம்மத் அல் காசிம்**

மஸ்ஜித் நபவிய்யின் கதீப் மற்றும் இமாம்

# முன்னுரை

الحمد لله رب العالمين، والصلاة والسلام على نبينا محمد وعلى آله وصحبه أجمعين، وبعد؛

அல்லாஹ் மனிதர்களையும் ஜின்களையும் அவனை வணங்குவதற்காக படைத்தான், வணக்கங்களை பல வகையாக்கியிருப்பது அவன், அவனது படைப்பின் மீது சொரிந்த அருளினாலாகும். வணக்கங்களில் சிலது உளரீதியான வணக்கமாகும், அல்லாஹ்வை பயப்படுவதும் அவன் மீது பொறுப்புச் சாட்டுவதும் அதற்கான உதாரணமாகும், வெளிப்படையான வணக்கம், வணக்கத்தின் இன்னொரு வகையாகும்: தொழுகை ஸக்காத் போன்றன அதற்கான உதாரணமாகும். துஆவே வணக்கத்தின் அடிப்படையான அம்சமாகும், மார்க்கத்தில் அதற்கு மகத்தான ஓர் இடம் உண்டு. அதன் மகிமையைத் தெளிவுபடுத்தி, அதன்பால் ஆசையூட்டி, அதன் ஒழுங்குகளை தெளிவுபடுத்தி நிறைய அல்குர்ஆன் வசனங்களும் ஹதீஸ்களும் வந்துள்ளன.

அடியார்கள் அவர்கள் எதிர்கொள்ளும் எல்லா நிலைமைகளிலும் எல்லா சந்தர்ப்பங்களிலும் இவ்வணக்கத்தை விட்டும் தேவையற்றிருக்க

முடியாது, யார் இவ்வணக்கத்தை உளத்தூய்மையுடனும் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் வழிமுறையைப் பின்பற்றியும் நிறைவேற்றுகின்றாரோ அவர் ஒரு மகத்தான வணக்கத்தை நிறைவேற்றி விட்டார், அவரது பிரார்த்தனை ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு மிகத் தகுதியானதாக ஆகிவிட்டது, இன்னும் யார் இவ்விடத்தில் தவறி, அல்லாஹ்வைப் பிரார்த்திப்பதில் பொடுபோக்குத்தனம் காட்டுகின்றாரோ, அல்லது வரம்பு மீறுகின்றாரோ, அல்லது அல்லாஹ் அல்லாதவர்களை தொடர்பு படுத்துகின்றாரோ, அவர் மகத்தான ஒரு வணக்கத்தை இழந்துவிட்டார், அவரது நோக்கம் நிறைவேறாமல் சென்று விட்டது, இன்னும் அவர் அல்லாஹ்வின் எச்சரிக்கைக்கு உட்பட்டு விட்டார்.

துஆவின் முக்கியத்துவத்தை கருத்திற் கொண்டும், அடியார்களுக்கு அதன் பாலுள்ள தேவையை கருத்தில் கொண்டும் இப்புத்தகத்தைத் தொகுத்துள்ளேன், அல்லாஹ் அல்லாதவர்கள் பிரார்த்திக்கப்படக்கூடாது என்பதே இப்புத்தகத்தில் அடிப்படையாகும். இப்புத்தகத்துக்கு (துஆ) (பிரார்த்தனை) என்று பெயரிட்டுள்ளேன். இது அடிப்படையில் நான் அல் மஸ்ஜிதுன் நபவியில், 20

ஸஃபர் மாதம் 1444 ஹி, வெள்ளிக்கிழமை ஆற்றிய குத்பா பேருரையாகும்.

அல்லாஹ் இதை அவனுக்காக செய்யப்பட்ட, ஒரு தூய்மையான செயலாகவும், அடியார்களுக்குப் பயனுள்ளதாகவும் ஆக்க வேண்டும் என பிரார்த்திக்கின்றேன்.

وصلى الله وسلم على نبينا محمد، وعلى آله وصحبه أجمعين.

**கலாநிதி அப்துல் முஹ்ஸின் பின் முஹம்மத் அல் காசிம்.**

மஸ்ஜித் நபவிய்யின் கதீப் மற்றும் இமாம்

20/02/1444

# வணக்கங்களை அல்லாஹ்வுக்காக மாத்திரம் தூய்மையாக நிறைவேற்றுவதே இஸ்லாத்தின் யதார்த்தம்

எல்லாக் காலங்களிலும் அல்லாஹ், அவனது படைப்பினங்களுக்கு ஏற்றுக்கொண்ட மார்க்கம் இஸ்லாமாகும். எல்லா நபிமார்களும் ரசூல்மார்களும் சுமந்து வந்ததும் அதையாகும், அல்லாஹ் கூறுகின்றான்:

﴿إِنَّ ٱلدِّينَ عِندَ ٱللَّهِ ٱلۡإِسۡلَٰمُۗ﴾

3:19. நிச்சயமாக (தீனுல்) இஸ்லாம் தான் அல்லாஹ்விடத்தில் (ஒப்புக்கொள்ளப்பட்ட) மார்க்கமாகும்

அல்லாஹ்வை மாத்திரம் தூய்மைப்படுத்தி, அவனை மாத்திரம் இரட்சகனாகவும், அனைத்துக்கும் சொந்தக்காரனாகவும் வணங்கப்படும் இறைவனாகவும் ஏற்றுக் கொள்வதாகும். அதுவே எமது தந்தையான இப்ராஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுடைய மார்க்கமான, அல்ஹனீபியா என்று சொல்லப்படும் சாந்தி மார்க்கம். அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ثُمَّ أَوۡحَيۡنَآ إِلَيۡكَ أَنِ ٱتَّبِعۡ مِلَّةَ إِبۡرَٰهِيمَ حَنِيفٗاۖ وَمَا كَانَ مِنَ ٱلۡمُشۡرِكِينَ﴾

16:123. (நபியே!) பின்னர் “நேர்மையாளரான இப்ராஹீமின் சன்மார்க்கத்தை நீர் பின்பற்ற வேண்டும்” என்று நாம் உமக்கு வஹீ அறிவித்தோம்; அவர் முஷ்ரிக்குகளில் (இணை வைப்போரில்) ஒருவராக இருந்ததில்லை.

அது கொள்கையையும் சட்டத்தையும் அறிவையும் செயற்பாட்டையும் உள்ளடக்கியது, அதன் வெளித்தோற்றம் அதன் உள்ளடக்கத்தை உண்மைப்படுத்துகின்றது. "லா இலாஹ இல்லல்லாஹ்" (வணக்கத்துக்குரிய நாயன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை) என்ற கலிமாவே அம்மாக்கத்தில் அடிப்படையும், அதன் அழகும் பூரணத்துவமும் உள்ள அதன் கட்டிடத்தில் உச்சமுமாகும், இம்மார்க்கத்தின் ஆரம்பமும் முடிவும், அதன் காரணமும், அதன் நோக்கமும் அந்தக் கலிமாவேயாகும். அந்தக் கலிமாவின் வசனத்துக்கும் அர்த்தத்துக்கும் இடையில் உள்ள தொடர்பு, உடலுக்கும் உயிருக்குமிடையிலுள்ள தொடர்புக்கு ஒப்பானதாகும், ஓர் உடல், உயிரின்றி பயன்பெற முடியாது போன்று அந்த கலிமாவின் அர்த்தத்தை ஏற்றுக் கொள்ளாமல் அதை மொழிவது எந்தப்

பயனையும் தராது, யார் அதன் அர்த்தத்தை அறிந்து, மொழிந்து, அதன்படி செயல்பட்டு அதன் கடமைகளைப் பூரணப்படுத்துகின்றாரோ அவர் ஏகத்துவத்தை உறுதிப்படுத்தி விட்டார், யார் அல்லாஹ் கூறுகின்ற விதத்தில் ஏகத்துவத்தை உறுதிப்படுத்துகின்றாரோ அவர் எவ்வித வேதனையும் கேள்வி கணக்குமின்றி சுவனம் நுழைவார்.

# அல்லாஹ்விடம் மாத்திரம் பிரார்த்திப்பதிலேயே இஸ்லாம் தங்கியுள்ளது

ஒருவர் அல்லாஹ்விடம் மட்டும் ஒன்றைக் கேட்பது, அவர் ஏகத்துவத்தில் இருக்கின்றார் என்பதற்கான மிக உறுதியான சான்றும், இன்னும் அல்லாஹ் தனித்தவன் என்பதற்கான மிக முக்கியமான ஆதாரமுமாகும். "நீங்கள் கேட்டால் அல்லாஹ்விடமே கேளுங்கள்" என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: திர்மிதி)(1)

பிரார்த்தனையின் போது அல்லாஹ்வை ஒருமைப்படுத்துவது அல்லாஹ்வின் மார்க்கத்தில் மிக முக்கியமான ஓர் அடிப்படை ஆகும், இந்நோக்கத்தை நிறைவேற்றவே ரசூல்மார்கள் அனுப்பப்பட்டனர், வேதங்களும் இறக்கப்பட்டன. இறை நிராகரிப்பாளர்கள் வெறுத்தாலும் கூட, இம்மார்க்கத்தையே தனது அடியார்கள்

---

[1] - இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் ஹதீஸ்: 2516

வெளிப்படுத்த வேண்டும் என்பதை அல்லாஹ் விரும்புகின்றான். அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ فَٱدۡعُواْ ٱللَّهَ مُخۡلِصِينَ لَهُ ٱلدِّينَ وَلَوۡ كَرِهَ ٱلۡكَٰفِرُونَ ﴾

40:14. ஆகவே, காஃபிர்கள் வெறுத்த போதிலும், நீங்கள் முற்றிலும் அவனுக்கே வழிபட்டு மார்க்கத்தில் பரிசுத்தத்துடன் அல்லாஹ் ஒருவனையே (பிரார்த்தித்து) அழையுங்கள்.

துஆவினுடைய விடயத்தில் அல்லாஹ்வை ஒருமைப்படுத்துவதிலேயே நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் தூது அமைந்திருக்கின்றது என்பதை தனது சமூகத்திற்கு அறிவிக்கும்படி அல்லாஹ் கட்டளையிட்டான்: அல்லாஹ் கூறுகின்றான்:

﴿قُلۡ إِنَّمَآ أَدۡعُواْ رَبِّي وَلَآ أُشۡرِكُ بِهِۦٓ أَحَدٗا﴾

72:20. (நபியே!) நீர் கூறும்: “நான் பிரார்த்திப்பதெல்லாம் என்னுடைய இறைவனைத் தான்; அன்றியும், நான் அவனுக்கு எவரையும் இணை வைக்க மாட்டேன்.”

# அல்லாஹ்விடம் மாத்திரம் பிரார்த்திக்காமல் பெருமையடிப்பவர்களுக்கான தண்டனை

யார் அல்லாஹ்விடம் அவரது தேவையை கேட்பதை விட்டும் பெருமை அடிக்கின்றாரோ அவருக்கு அல்லாஹ் நரகத்தைக் கொண்டும் இழிவைக் கொண்டும் எச்சரித்துள்ளான், அல்லாஹ் கூறுகின்றான்:

﴿إِنَّ ٱلَّذِينَ يَسۡتَكۡبِرُونَ عَنۡ عِبَادَتِي سَيَدۡخُلُونَ جَهَنَّمَ دَاخِرِينَ﴾

40:60. “என்னையே நீங்கள் பிரார்த்தியுங்கள்; நான் உங்(கள் பிரார்த்தனை)களுக்கு பதிலளிக்கிறேன்; எவர்கள் என்னை வணங்குவதை விட்டும் பெருமையடித்துக் கொண்டிருக்கிறார்களோ, அவர்கள் சிறுமையடைந்தவர்களாக நரகத்தில் நுழைவார்கள்.”

யாருடைய உள்ளம் அல்லாஹ்விடம் மாத்திரம் தனது தேவைகளை கேட்கும் விடயத்தை வெறுக்கின்றதோ, அவ்வுள்ளம் படைப்புகளிடத்தில் தேவைகளை கேட்பதன் மூலமாக அமைதி பெற மாட்டாது. அத்துடன் அது வழிகேட்டிற்கும், மறுமை

நாள் பற்றிய பொடுபோக்கு தன்மைக்குமான ஒரு அடையாளமுமாகும். அல்லாஹ் கூறுகின்றான்:

﴿وَإِذَا ذُكِرَ ٱللَّهُ وَحۡدَهُ ٱشۡمَأَزَّتۡ قُلُوبُ ٱلَّذِينَ لَا يُؤۡمِنُونَ بِٱلۡأٓخِرَةِ﴾

39:45. மேலும், அல்லாஹ்(வின் பெயர்) மட்டும் தனித்தவனாகக் கூறப்பட்டால் மறுமையை ஈமான் கொள்ளாதவர்களின் இருதயங்கள் சுருங்கி விடுகின்றன.

அதாவது: அவர்களின் உள்ளங்கள் பெருமைப்பட்டு, வணக்கத்திலும் பிரார்த்தனை யிலும் அல்லாஹ்வை ஒருமைப்படுத்துவதை ஏற்றுக் கொள்ள மறுத்தன.

# பிரார்த்தனையே வணக்கம்

அல்லாஹ் உள்ளத்தோடு தொடர்பு படுத்தி அறிமுகப்படுத்திய ஈமானிய நிலைகள் அனைத்திலும் துஆ மிக அடிப்படையான ஒன்றாக உள்ளது.

வெளிப்படையான மற்றும் மறைமுகமான வணக்கங்கள் அனைத்தினதும் முடிவும் எதார்த்தமும் துஆவேயாகும். யாரொருவர் தொழுதாலும், நோன்பு பிடித்தாலும், ஹஜ் செய்தாலும், தர்மம் செய்தாலும் அவர் அந்நிலையில் இறைவனையே அழைக்கின்றார். அவர் அவரது இறைவனுக்காக நிறைவேற்றக்கூடிய வணக்கமும், அவரது அடிபணிதலும், அவரது அவன் மீதான அன்பும் - அவரது இறைவனிடத்தில் அவர் செய்த வணக்கத்தை ஏற்றுக் கொள்ளும்படியும், அவரின் பால் நெருங்கும் படியும் கேட்கக் கூடியதாக இருக்கின்றது. துஆவே வணக்கமாகும், அதுவே வணக்கத்தின் அடிப்படையாகவும், யதார்த்தமுமாகவும் இருக்கின்றது. "துஆவே வணக்கமாகும்" என ரசூலுல்லாஹ் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறிவிட்டு பின்வரும் வசனத்தை ஓதினார்கள், அல்லாஹ் கூறுகின்றான்:

﴿وَقَالَ رَبُّكُمُ ٱدۡعُونِيٓ أَسۡتَجِبۡ لَكُمۡۚ﴾

40:60. உங்கள் இறைவன் கூறுகிறான்: “என்னையே நீங்கள் பிரார்த்தியுங்கள்; நான் உங்(கள் பிரார்த்தனை)களுக்கு பதிலளிக்கிறேன்” (ஆதாரம்: அஹமத்) [1]

---

1 - அந்நுஃமான் பின் பஷீர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் ஹதீஸ்: 18432

# அல்லாஹ்வை மாத்திரம் பிரார்த்திப்பதன் முக்கியத்துவம்

துஆவிற்கு இருக்கின்ற உன்னத தன்மையின் காரணமாகத்தான், அல்லாஹ் அவனது வேதத்தை துஆவை கொண்டு ஆரம்பித்திருக்கின்றான், அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ ٱهۡدِنَا ٱلصِّرَٰطَ ٱلۡمُسۡتَقِيمَ ﴾

1:6. நீ எங்களை நேர்வழியில் நடத்துவாயாக!

அதேபோன்று அவ்வேதத்தை இரண்டு பாதுகாப்பு தேடும் சூராக்களை கொண்டு முடித்திருக்கின்றான், அவற்றிலும் துஆ இடம்பெற்றிருக்கின்றது.

அல்லாஹ் துஆவை (அத்தீன்) மார்க்கம் என்று பெயர் கொண்டு அழைத்துள்ளான், அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ فَٱدۡعُواْ ٱللَّهَ مُخۡلِصِينَ لَهُ ٱلدِّينَ ﴾

40:14. நீங்கள் முற்றிலும் அவனுக்கே வழிபட்டு மார்க்கத்தில் பரிசுத்தத்துடன் அல்லாஹ் ஒருவனையே (பிரார்த்தித்து) அழையுங்கள்.

அதேபோன்று அப்பெயர் கொண்டு அனைத்து வணக்கங்களையும் நாடியுள்ளான், அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ وَقَالَ رَبُّكُمُ ٱدۡعُونِيٓ أَسۡتَجِبۡ لَكُمۡۚ

إِنَّ ٱلَّذِينَ يَسۡتَكۡبِرُونَ عَنۡ عِبَادَتِي سَيَدۡخُلُونَ جَهَنَّمَ دَاخِرِينَ ﴾

40:60. உங்கள் இறைவன் கூறுகிறான்: “என்னையே நீங்கள் பிரார்த்தியுங்கள்; நான் உங்(கள் பிரார்த்தனை)களுக்கு பதிலளிக்கிறேன்; எவர்கள் என்னை வணங்குவதை விட்டும் பெருமையடித்துக் கொண்டிருக்கிறார்களோ, அவர்கள் சிறுமையடைந்த வர்களாக நரகத்தில் நுழைவார்கள்.”

# அல்லாஹ்வை மாத்திரம் பிரார்த்திப்பது ஈமானின் அடையாளமாகும்

துஆவில் அல்லாஹ்வை மாத்திரம் தூய்மைப்படுத்துவது இறை விசுவாசத்திற்கான அடையாளமாகவும், உறுதிக்கான சான்றாகவும், பாதுகாப்பு கயிறாகவும், வெற்றிக்கான வழியாகவும் உள்ளது. இன்னும் அதுவே நபிமார்களதும் முஃமின்களதும் அடையாளச் சின்னமுமாகும்.

துஆவினுடைய விடயத்தில் அல்லாஹ்வை ஒருமைப்படுத்துகின்றவனே உண்மையான வணக்கசாலியாவான், இன்னும் மிகப்பெரும் உண்மையை சரியான முறையில் அறிந்து கொண்டவனும் அவனேயாகும். ஏனெனில் துஆவே முஸ்லிம்கள் தாங்கி நிற்கக்கூடிய தூணாகவும், தேவையுடையவர்கள் அடைக்கலம் அடையக்கூடிய பாதுகாப்பு தளமாகவும் உள்ளது. கஷ்டங்களே ஓர் அடியானுக்கு அவனது இறைவனை ஞாபகப்படுத்தி, அவனை உளத்தூய்மையுடன் அழைக்க கற்றுக் கொடுக்கின்றது, அல்லாஹ் கூறுகின்றான்:

﴿وَإِذَا مَسَّ ٱلۡإِنسَٰنَ ٱلضُّرُّ دَعَانَا لِجَنۢبِهِۦٓ أَوۡ قَاعِدًا أَوۡ قَآئِمًا﴾

10:12. மனிதனை (ஏதேனும் ஒரு) துன்பம் தீண்டுமானால் அவன் (ஒருச்சாய்ந்து) படுத்துக்கொண்டோ, அல்லது உட்கார்ந்து கொண்டோ, அல்லது நின்ற நிலையிலோ (அதை நீக்குமாறு) நம்மிடமே பிரார்த்திக்கின்றான்

# அல்லாஹ் மாத்திரமே பிரார்த்தனைகளுக்கு விடையளிப்பவன்

எங்களது இறைவனாகிய அல்லாஹ்வே எல்லா சந்தர்ப்பங்களிலும் அழைக்கப்படுபவன், அவனே அடைப்பவன், அவனுக்கு முடியாதது ஒன்றுமில்லை, அவன் அனைத்தின் மீதும் சக்தியுடையவன், ரிஸ்க் அவன் கையிலேயே இருக்கின்றது, தருவதும் தடுப்பதும் அவனது விருப்பமே, பூரணம், அழகு, உன்னதம் ஆகிய பண்புகள் அவனை விட்டுப் பிரியாதவை, யார் அவனது பெயர்களைக் கொண்டும் பண்புகளைக் கொண்டும் அவனிடம் உதவி தேடுகின்றாரோ, அல்லாஹ் அவரது தேவையை நிறைவேற்றிக் கொடுக்கின்றான், அல்லாஹ் கூறுகின்றான்:

﴿وَلِلَّهِ ٱلْأَسْمَآءُ ٱلْحُسْنَىٰ فَٱدْعُوهُ بِهَا﴾

7:180. அல்லாஹ்வுக்கு அழகிய திருநாமங்கள் இருக்கின்றன; அவற்றைக் கொண்டே நீங்கள் அவனைப் பிரார்த்தியுங்கள்

எமது இறைவன் அவனிடம் கேட்பவர்களுக்கும் அவனை வணங்குகின்றவர்களுக்கும் மிக

நெருக்கமாக உள்ளான், யார் அவரது தேவையை அவனிடத்தில் முன்வைக்கின்றாரோ அவன் தேவையை நிறைவேற்றிக் கொடுக்கின்றான், யார் அவரிடம் ஏதாவது ஒன்றைக் கேட்கின்றாரோ, அதை அவன் அவனுக்குக் கொடுக்கின்றான், அல்லாஹ் கூறுகின்றான்:

﴿وَإِذَا سَأَلَكَ عِبَادِى عَنِّى فَإِنِّى قَرِيبٌ ۖ أُجِيبُ دَعْوَةَ ٱلدَّاعِ إِذَا دَعَانِ ۖ﴾

2:186. (நபியே!) என் அடியார்கள் என்னைப்பற்றி உம்மிடம் கேட்டால்; "நிச்சயமாக நான் சமீபமாகவே இருக்கிறேன், பிரார்த்தனை செய்பவரின் பிரார்த்தனைக்கு அவர் பிரார்த்தித்தால் விடையளிக்கிறேன்

அல்லாஹ் என்றென்றும் ஜீவித்திருப்பவனும் நிலைத்திருப்பவனுமாகும், அவனிடம் ஒன்றைக் கேட்பவர், கஷ்டங்களைப் போக்குவதற்கு சக்தியுடையவனிடம் ஒன்றைக் கேட்கின்றார் என்பது அர்த்தம், அல்லாஹ் கூறுகின்றான்:

﴿هُوَ ٱلْحَىُّ لَآ إِلَٰهَ إِلَّا هُوَ فَٱدْعُوهُ مُخْلِصِينَ لَهُ ٱلدِّينَ ۗ﴾

40:65. அவனே (என்றென்றும்) உயிரோடிருப்பவன்; அவனையன்றி (வேறு) நாயனில்லை - ஆகவே நீங்கள்

அவனுக்கே முற்றிலும் வழிபட்டு தூய உள்ளத்தோடு அவனை அழையுங்கள்

துஆ கேட்கப்படுவதற்கு அவன் மட்டும் தனித்து தகுதியாக இருப்பது, அவன் மாத்திரமே உண்மையானவன் என்பதற்கும், அதேபோன்று அவன் அல்லாதவர்களிடம் கேட்கப்படுவது பதில் அளிக்கப்பட மாட்டாது என்பதற்குமான ஆதாரமாகும், அல்லாஹ் கூறுகின்றான்:

﴿لَهُۥ دَعۡوَةُ ٱلۡحَقِّۚ وَٱلَّذِينَ يَدۡعُونَ مِن دُونِهِۦ لَا يَسۡتَجِيبُونَ لَهُم بِشَيۡءٍ﴾

13:14. உண்மையான அழைப்பு (பிரார்த்தனை) அவனுக்கே உரியதாகும்; எவர் அவனை அன்றி (மற்றவர்களை) அழைக்கின்றார்களோ, அவர்கள் இவர்களுக்கு எவ்வித பதிலும் தர மாட்டார்கள்

அவனது தயாளத்தன்மை புத்திக்கு எட்டாதவை, அவனது கொடை ஆச்சரியத்திலும் ஆச்சரியமானவை, சிறிய நன்மைகளுக்கு பெரும் கூலியை வழங்குகின்றான், அவனைப் புகழ்ந்து அவனிடம் ஒன்றைக் கேட்கின்ற போது, அதற்குப் பிரதி உபகாரமாகப் பெரும் கொடைகளை வழங்குகின்றான்.

அவனுக்கு இணைவைக்காது அவனை ஒருமைப் படுத்துகின்றவர்களது பெரும் பாவங்களையும் மன்னிக்கின்றான். ஒரு ஹதீஸுல் குத்ஸிய்யில்

அல்லாஹ்: "யார், எந்த ஒன்றையும் எனக்கு இணை வைக்காது, பூமியினளவு பாவத்துடன் என்னிடம் வந்தால், நான் அதே அளவு பாவமன்னிப்புடன் அவரை ஏற்றுக் கொள்வேன்" என்று கூறுகின்றான். (ஆதாரம்: முஸ்லிம்)(1)

1 - அபூ தர் (ரழியல்லாஹுஅன்ஹு) அவர்களின் ஹதீஸ்: 2687

# நபிமார்கள் அல்லாஹ்வை மாத்திரமே அழைப்பார்கள்

அல்லாஹ்வுக்கு மிக விருப்பத்துக்குரியவர், அவனிடம் அதிகமாகவும் வழிந்தும் கேட்பவராகும். ஓர் அடியானின் ஈமானும், அவனது மார்க்க விளக்கமும், அவனது இறைவனடான தொடர்பும் அதிகரிக்கும் போதெல்லாம், அவனது எல்லா சந்தர்ப்பங்களிலும் அல்லாஹ்விடம் துஆ கேட்பதற்குரிய விருப்பமும் அதிகரிக்கும். "நீங்கள் உங்களது அனைத்து தேவைகளையும் உங்களது இறைவனிடமே கேளுங்கள், உங்களது பாதணியின் வார்கள் அறுந்தாலும் சரியே" என ரசூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: திர்மிதி)(1).

நபிமார்களும் அவர்களை பின் துயர்ந்தவர்களும் அல்லாஹ்விடத்தில், அவர்களது இவ்வுலக, மறு உலக, மார்க்க நலன்கள் அனைத்தையும் கேட்கக் கூடியவர்களாக இருந்திருக்கின்றார்கள், யாருக்குத்தான் அல்லாஹ்விடம் கேட்பதை விட்டும் தேவையற்றிருக்க முடியும்?! ஒரு

---

[1] - அனஸ் பின் மாலிக் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் ஹதீஸ்: 8- 3604

அடியானின் சிறப்பு அவன் அவனது இறைவனிடம் கேட்பது, இறைவனின் சிறப்பு அவனது அடியார்களின் கேள்விக்கு விடையளிப்பது; யார் தனது இறைவனிடம் கேட்பதை விட்டும் தேவையற்றிருக்க நினைக்கின்றாரோ அவர் அல்லாஹ்வின் கட்டுப்பாட்டிலிருந்து வெளியேறி விட்டார்." என சைஹுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா (ரஹிமஹுல்லா) அவர்கள் கூறினார்கள்.[1]

நபிமார்கள் எல்லா சந்தர்ப்பங்களிலும் அதிகமாக துஆவிலேயே இருப்பார்கள். அல்லாஹ் கூறுகின்றான்:

﴿إِنَّهُمْ كَانُوا۟ يُسَٰرِعُونَ فِى ٱلْخَيْرَٰتِ وَيَدْعُونَنَا رَغَبًا وَرَهَبًا ۖ وَكَانُوا۟ لَنَا خَٰشِعِينَ﴾

21:90. நிச்சயமாக இவர்கள் யாவரும் நன்மைகள் செய்வதில் விரைபவர்களாக இருந்தார்கள் - இன்னும், அவர்கள் நம்மை ஆசை கொண்டும், பயத்தோடும் பிரார்த்தித்தார்கள். மேலும், அவர்கள் நம்மிடம் உள்ளச்சம் கொண்டவர்களாக இருந்தார்கள்.

ஸகரிய்யா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுக்கு குழந்தை ஆசை வந்த போது அல்லாஹ்விடம் நல்ல சந்ததியை தரும்படி கேட்டார், அல்லாஹ்வை புகழ்ந்து, நீ பிரார்த்தனைகளை

---

[1] - அர்ரத்து அலஷ் ஷாதுலி: பக்: 57

கேட்பவன் என்று கூறிவிட்டு தொழும் இடத்துக்குச் சென்றார், அங்கு மலக்குமார்கள், அவரின் பரம்பரையிலிருந்து ஒரு நபி வரவிருப்பதாக நன்மாராயம் கூறினார்கள், அவர் அச்சந்தர்ப்பத்தில் வயது முதிர்ந்தவராகவும், சக்தி குன்றியவராகவும் காணப்பட்டார். நூஹ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் சமூகம் அவர்களுக்கு மாறு செய்து, அவர்களை பொய்ப்பித்த போது, அல்லாஹ் கூறுகின்றான்:

﴿فَدَعَا رَبَّهُۥٓ أَنِّي مَغۡلُوبٞ فَٱنتَصِرۡ﴾

54:10. அப்போது அவர்; "நிச்சயமாக நாம் தோல்வியடைந்தவனாக இருக்கிறேன்; ஆகவே, நீ (எனக்கு) உதவி செய்வாயாக!" என்று அவர் தம் இறைவனிடம் பிரார்த்தித்தார்.

அல்லாஹ், அவர்களைப் பின்பற்றிய முஃமின்களைத் தவிர, அடுத்த அனைவரையும் பெரும் வெள்ளத்தில் மூழ்கடிக்கச் செய்தான்.

அல்லாஹ் குகைவாசிகளின் செய்தியை கூறிய போது: அவர்கள் ஏகத்துவ வாலிபர்கள் என்றும், அல்லாஹ்விடம் மாத்திரம் கேட்பதே மார்க்கம், அவன் அல்லாதவர்களிடம் கேட்பது மார்க்கமல்ல என்பதை அறிந்து, அவர்களது சமூகத்தாரிடம் சென்று:

﴿رَبُّنَا رَبُّ ٱلسَّمَٰوَٰتِ وَٱلۡأَرۡضِ لَن نَّدۡعُوَاْ مِن دُونِهِۦٓ إِلَٰهٗا

﴿لَّقَدۡ قُلۡنَآ إِذٗا شَطَطًا﴾

18:14. “வானங்களுக்கும், பூமிக்கும் இறைவனாகிய அவனே, எங்களுடைய இறைவன்; எக்காலத்தும் அவனையன்றி வேறு எவரையும் நாயனென்று அழைக்க மாட்டோம்; (அப்படிச் செய்தால் குஃப்ரில் கொண்டு சேர்க்கும்) - வரம்பு மீறியதைச் சொன்னவர்கள் ஆவோம்” என்று கூறினார்கள்.

முஃமீன்கள் காலையிலும் மாலையிலும் இரவின் கடைசி பகுதியிலும் துஆவில் ஈடுபடுவார்கள், அல்லாஹ் கூறுகின்றான்:

﴿تَتَجَافَىٰ جُنُوبُهُمۡ عَنِ ٱلۡمَضَاجِعِ يَدۡعُونَ رَبَّهُمۡ خَوۡفٗا وَطَمَعٗا
وَمِمَّا رَزَقۡنَٰهُمۡ يُنفِقُونَ﴾

32:16. அவர்களுடைய விலாக்களைப் படுக்கைகளிலிருந்து (தூக்கத்தைத் துறந்து) உயர்த்தி அவர்கள் தங்களுடைய இறைவனை அச்சத்தோடும் நம்பிக்கை ஆர்வத்தோடும் பிரார்த்தனை செய்வார்கள்; மேலும் நாம் அவர்களுக்கு அளித்ததிலிருந்து (தானதர்மங்களில்) செலவும் செய்வார்கள்.

உளத்தூய்மையுடன் வணக்கத்தில் ஈடுபடுகின்றவர்களுடனும், அதிகமாக அல்லாஹ்விடம் பிரார்த்திக்கின்றவர்களுடனும் தோழமை

கொள்வது அல்லாஹ் அவனது நபிமார்களுக்கு ஏவிய ஒரு விடயமாகும், அல்லாஹ் கூறுகின்றான்:

﴿وَٱصۡبِرۡ نَفۡسَكَ مَعَ ٱلَّذِينَ يَدۡعُونَ رَبَّهُم بِٱلۡغَدَوٰةِ وَٱلۡعَشِيِّ يُرِيدُونَ وَجۡهَهُۥۖ﴾

18:28. (நபியே!) எவர் தம் இறைவனுடைய திருப்பொருத்தத்தை நாடியவர்களாக காலையிலும், மாலையிலும் அவனைப் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறார்களோ, அவர்களுடன் நீரும் பொறுமையை மேற் கொண்டிருப்பீராக!

# அல்லாஹ்வை மாத்திரம் பிரார்த்திப்பதால் கிடைக்கும் பயன்கள்

துஆவின் பயன் மகத்தானது, அதன் நன்மை பொதுவானது, உயிருடனுள்ளவர்களும் இறந்தவர்களும் அதன் மூலமாகப் பயன் பெறுவர். அதன் பரக்கத்தை துஆக் கேட்பவரும், துஆ கேட்கப்படுபவரும் அடைந்து கொள்வர்.

அடுத்த காரணங்களை போன்று இதுவும் ஒரு தாக்கம் செலுத்தும் காரணமாகும். அல்லாஹ்வின் நாட்டப்படியே ஓர் அடியான் அவனிடம் பிரார்த்திக்கின்றான், அல்லாஹ் அவனது விருப்பத்தின் அடிப்படையில் அவனுக்கு பதிலளிக்கின்றான். அல்லாஹ்வின் முன்கூட்டிய அறிவின் படி, துஆ பாசத்தை தடுக்கும், அதேபோன்று நன்மையை கொண்டு வந்து அல்லாஹ்வின் நாட்டப்படி ஆபத்துகளிலிருந்தும் பாதுகாக்கும், அனைத்தும் அல்லாஹ்வுடன் தொடர்பு பட்டவையே, எந்தப் படைப்புக்கும் அதில் தலையிட முடியாது.

தூய்மையான பிரார்த்தனை ஓர் ஒளியாகும், அல்லாஹ் ஒருவனைத் தவிர வேறு இறைவனோ இணையோ துணையோ இல்லை என்ற கொள்கையின்

மூலமாக பிரார்த்தனை செய்பவர் அல்லாஹுவின் ஒரு அடியானாக மாறிவிடுகின்றான்; அப்போது அவன் அன்பு மகத்துவம் நாட்டம் பயம் ஆதரவு அனைத்திலும் அவனையே ஒருமைப்படுத்துகின்றான், அவனது உள்ளம் சந்தோஷத்திலும் துன்பத்திலும் அவனை ஏ சார்ந்திருக்கும், அவனது நாவு சந்தோசமான நேரங்களிலும் கஷ்டமான நேரங்களிலும் அவனைப் பிரார்த்திப்பதிலேயே அசைந்து கொண்டிருக்கும்.

# இறைவனை ஒருமைப்படுத்துபவனின் அடையாளங்களில் சில:

யார் தனது ஏகத்துவத்தின் யதார்த்தத்தை அறிய விரும்புகின்றாரோ அவர் யாரைப் பிரார்த்திக்கின்றார் என்பதை பார்த்துக் கொள்ளட்டும், யார் தூய்மையாக அல்லாஹ்விடமே பிரார்த்திக்கின்றாரோ அவர் ஏகத்துவத்தை உறுதிப்படுத்திவிட்டார், இன்னும் யார் அல்லாஹ் அல்லாதவர்களிடம் பிரார்த்திக்கின்றாரோ அவர் இணை வைத்து விட்டார். அல்லாஹ் கூறுகின்றான்:

﴿وَمَن يَدۡعُ مَعَ ٱللَّهِ إِلَٰهًا ءَاخَرَ لَا بُرۡهَٰنَ لَهُۥ بِهِۦ فَإِنَّمَا حِسَابُهُۥ عِندَ رَبِّهِۦٓۚ إِنَّهُۥ لَا يُفۡلِحُ ٱلۡكَٰفِرُونَ﴾

23:117. மேலும், எவன் அல்லாஹ்வுடன் வேறு நாயனைப் பிரார்த்திக்கிறானோ அவனுக்கு அதற்காக எவ்வித ஆதாரமும் இல்லை; அவனுடைய கணக்கு அவனுடைய இறைவனிடம்தான் இருக்கிறது; நிச்சயமாக காஃபிர்கள் வெற்றி அடைய மாட்டார்கள்.

# இறைத்தூதர்கள் எவரும் அவர்களை வணங்கும் படி ஏவவில்லை

பூரணத்துவமும் கண்ணியமும் அல்லாஹ்வுக்கு மாத்திரம் உரியவை, வணக்கம் அல்லாஹ்வுக்கு மாத்திரம் நிறைவேற்றப்பட வேண்டியது, இறைமை அவனது கண்ணியத்துக்கு மாத்திரம் வழங்கப்பட வேண்டியது, மனிதர்கள், அவர்களது அந்தஸ்து எவ்வளவு உயர்ந்ததாக இருந்தாலும் அல்லாஹ் அல்லாது, குறைவாகவோ அதிகமாகவோ பிரார்த்திக்கப்படுவதற்கு தகுதியற்றவர்கள். யார் இவ்வுலகில் ஒரு சிறு படைப்பையேனும் படைக்க சக்தி பெறவில்லையோ அவருக்கு வணக்கத்திலோ பிரார்த்தனையிலோ எந்த பங்கும் இல்லை. அல்லாஹ் கூறுகின்றான்:

﴿إِنَّ ٱلَّذِينَ تَدۡعُونَ مِن دُونِ ٱللَّهِ لَن يَخۡلُقُواْ ذُبَابٗا وَلَوِ ٱجۡتَمَعُواْ لَهُۥۖ﴾

22:73. நிச்சயமாக அல்லாஹ்வையன்றி (வேறு) எவர்களை நீங்கள் பிரார்த்திக்கின்றீர்களோ, அவர்களெல்லாம் ஒன்று சேர்ந்தாலும் ஓர் ஈயைக்கூடப் படைக்க முடியாது

அல்லாஹ் தனது படைப்பிலிருந்து சிலரை தூதர்களாகத் தேர்ந்தெடுத்து, அவர்களை

அடுத்தவர்களை விட சிறப்பித்துள்ளான், என்றாலும் அவர்களில் எவரும் அல்லாஹ்வின் இரட்சிப்பில் முரண்படவுமில்லை, அவர்களைப் பிரார்த்திக்கும்படி மக்களை ஏவவுமில்லை, அதை பொருந்திக் கொள்ளவுமில்லை. அல்லாஹ் கூறுகின்றான்:

﴿وَإِذْ قَالَ ٱللَّهُ يَٰعِيسَى ٱبْنَ مَرْيَمَ ءَأَنتَ قُلْتَ لِلنَّاسِ ٱتَّخِذُونِى وَأُمِّىَ إِلَٰهَيْنِ مِن دُونِ ٱللَّهِ ۖ قَالَ سُبْحَٰنَكَ مَا يَكُونُ لِىٓ أَنْ أَقُولَ مَا لَيْسَ لِى بِحَقٍّ ۚ إِن كُنتُ قُلْتُهُۥ فَقَدْ عَلِمْتَهُۥ ۚ تَعْلَمُ مَا فِى نَفْسِى وَلَآ أَعْلَمُ مَا فِى نَفْسِكَ ۚ إِنَّكَ أَنتَ عَلَّٰمُ ٱلْغُيُوبِ﴾

5:116. இன்னும், "மர்யமுடைய மகன் ஈஸாவே, "அல்லாஹ்வையன்றி என்னையும் என் தாயாரையும் இரு கடவுள்களாக ஆக்கிக்கொள்ளுங்கள்" என்று மனிதர்களிடம் நீர் கூறினீரா?" என்று அல்லாஹ் கேட்கும் போது அவர், "நீ மிகவும் தூய்மையானவன்; எனக்கு உரிமையில்லாத ஒன்றை நான் சொல்வதற்கில்லை" என்று அவர் கூறுவார்.

அவர்கள் நோய்வாய்ப்படுபவர்களாகவும், பலயீனமுருபவர்களாகவும் இருந்தனர். இன்னும் அவர்களில் சிலர் கொலை செய்யப்பட்டனர் இன்னும் சிலர் சூனியம் செய்யப்பட்டு நோயுற்றனர், அவர்கள் மனிதர்கள், ஆகவே அவர்கள் சாப்பிடக் கூடியவர்களாகவும் குடிக்க கூடியவர்களாகவும்

இருந்தார்கள், சாப்பிட்டால்தான் உயிர் வாழ முடியுமானவர்கள் எப்படி இறைவனாக இருக்க முடியும்?! அதைவிட படைப்புக்களில் எல்லாம் சிறந்த படைப்பாகிய எமது நபி முஹம்மத் (ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம்) அவர்களுடைய முன் பற்கள் உடைக்கப்பட்டன[1], தலைப்பிலக்கப்பட்டது, குதிரையிலிருந்து விழுந்தார்கள், அதன் மூலமாக அவர்களது தோள் கிழிந்தது, விழுந்த தாக்கத்தினால் உட்கார்ந்து தொழக்கூடியவர்களாகவும் இருந்தார்கள்[2].

---

[1] - ஸஹ்ல் பின் ஸஃத் (றழி) அவர்களின் ஹதீஸ், புகாரி: 2911 முஸ்லிம்: 1790

[2] - அனஸ் பின் மாலிக் (ரழியல்லாஹுு அன்ஹுு) அவர்களின் ஹதீஸ், புகாரி: 689, முஸ்லிம்: 411

# அல்லாஹ் அல்லாதவர்களைப் பிரார்த்திப்பதே பூமியில் செய்யப்படும் மிகப் பெரும் பாவம்

அல்லாஹ் அல்லாதவர்களிடம் பிரார்த்திப்பது மிகப்பெரும் பாவமாகும், அல்லாஹ் அவனது நபியை பார்த்து, அல்லாஹ் கூறுகின்றான்:

﴿وَلَا تَدۡعُ مِن دُونِ ٱللَّهِ مَا لَا يَنفَعُكَ وَلَا يَضُرُّكَۖ فَإِن فَعَلۡتَ فَإِنَّكَ إِذٗا مِّنَ ٱلظَّٰلِمِينَ﴾

10:106. உமக்கு (எவ்வித) நன்மையையோ, தீமையையோ செய்ய இயலாத அல்லாஹ் அல்லாததை எதனையும் நீர் பிரார்த்திக்க வேண்டாம்; (அவ்வாறு) செய்வீராயின் நிச்சயமாக நீர் அநியாயக்காரர்களில் ஒருவராகிவிடுவீர்.

அல்லாஹ் அல்லாதவர்களை பிரார்த்திப்பதில் மிக மோசமானது: அல்லாஹ்வுக்கும் அவனது படைப்புக்கும் இடையில் இடைத்தரகர்கள் வைப்பதாகும், சைஹுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா (ரஹிமஹுல்லா) அவர்கள்: "இந்த நபியும் அவர்களது சமூகத்தாரிடம், இறந்த நல்லடியார்களிடமோ மறைவாக இருப்பவர்களிடமோ வானவர்களிடமோ கேட்கவோ அல்லது பரிந்துரைகள் கேட்கவோ கற்றுக் கொடுக்கவில்லை, மாற்றமாக அதுவே இணை வைத்தலில்

அடிப்படையாகும், ஏனெனில் இணைவைப்பாளர்கள் அவர்களைப் பரிந்துரை செய்பவர்களாக எடுத்துக் கொண்டனர், அல்லாஹ் கூறுகின்றான்:

﴿وَيَعۡبُدُونَ مِن دُونِ ٱللَّهِ مَا لَا يَضُرُّهُمۡ وَلَا يَنفَعُهُمۡ وَيَقُولُونَ هَٰٓؤُلَآءِ شُفَعَٰٓؤُنَا عِندَ ٱللَّهِ﴾

10:18. தங்களுக்கு (யாதொரு) நன்மையோ தீமையோ செய்ய இயலாத அல்லாஹ் அல்லாதவற்றை (முஷ்ரிக்குகள்) வணங்குகிறார்கள்; இன்னும் அவர்கள், “இவை எங்களுக்கு அல்லாஹ்விடம் மன்றாட்டம் செய்பவை” என்றும் கூறுகிறார்கள்.(1)

அல்லாஹ்வுடன் இணைத்து இன்னொருவரிடம் கேட்பதே இவ்வுலகில் உள்ள மிகப் பெரும் பாவமாகும், இப்னு மஸ்ஊத் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள்: "அல்லாஹ்வின் தூதரே, எது மிகப் பெரும் பாவம்" என்று கேட்டதற்கு: "அல்லாஹ், உன்னை படைத்திருக்க, நீ அவனுக்கு இணை கற்பிப்பதாகும்". என்று கூறினார்கள். (ஆதாரம்: புகாரி முஸ்லிம்).(2)

அல்லாஹ், அவனுடன் சேர்த்து அவன் அல்லாத இன்னொருவரைப் பிரார்த்திப்பவர்களை வேதனை செய்வதாக எச்சரித்துள்ளான், அல்லாஹ் கூறுகின்றான்:

---

1 - காஇதா அழீமா: 1/121

2 - புகாரி: 4477, முஸ்லிம்: 86

﴿فَلَا تَدۡعُ مَعَ ٱللَّهِ إِلَٰهًا ءَاخَرَ فَتَكُونَ مِنَ ٱلۡمُعَذَّبِينَ﴾

26:213. ஆதலின் அல்லாஹ்வுடன் வேறொரு நாயனை அழைக்காதீர்; அவ்வாறு (செய்வீர்) ஆயின், வேதனை செய்யப்படுபவர்களில் ஒருவராக நீர் ஆகிவிடுவீர்.

(நீ எனக்கு மிக கண்ணியத்துக்குரிய படைப்பு, நான் அல்லாத வேறொருவரை நீ இறைவனாக எடுத்துக் கொண்டால் நான் உன்னை வேதனை செய்வேன்.) என்று அல்லாஹ் அடுத்தவர்களுக்கு எச்சரிப்பதாக இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறினார்கள்.(1) தொழுகை, அதனுள் ருகூஉ ஸுஜூத் போன்றவை கடமையாக்கப்பட்டதும், அல்லாஹ்வின் பூமியிலே மஸ்ஜித்கள் உருவாக்கப்பட்டதும், அவற்றில் அல்லாஹ் அழைக்கப்பட வேண்டும், அவனல்லாதவர்கள் ஒருபோதும் அழைக்கப்படக் கூடாது என்பதற்காகத்தான். அல்லாஹ் கூறுகின்றான்:

﴿وَأَنَّ ٱلۡمَسَٰجِدَ لِلَّهِ فَلَا تَدۡعُواْ مَعَ ٱللَّهِ أَحَدٗا﴾

72:18. “அன்றியும், நிச்சயமாக மஸ்ஜிதுகள் அல்லாஹ்வுக்காகவே இருக்கின்றன, எனவே, (அவற்றில்) அல்லாஹ்வுடன் (சேர்த்து வேறு) எவரையும் நீங்கள் பிரார்த்திக்காதீர்கள்.

[1] - தப்ஸீர் பஹவி: 3/480

# இறந்தவர் அவரைப் பிரார்த்திப்பவரை செவி மடுக்க மாட்டார்

பிரார்த்திப்பவன் அவனை படைத்தவனையே பிரார்த்திக்க வேண்டும், அவனைப் போன்று அடைக்கப்பட்ட ஒருவனை பிரார்த்திக்கக் கூடாது, இன்னும் அவனைப் போன்று அடிமைத்தனத்தில் பங்கு கொள்ளக் கூடியவர்களிடம் உதவி தேடவும் கூடாது, அல்லாஹ் கூறுகின்றான்:

﴿إِنَّ ٱلَّذِينَ تَدۡعُونَ مِن دُونِ ٱللَّهِ عِبَادٌ أَمۡثَالُكُمۡۖ فَٱدۡعُوهُمۡ فَلۡيَسۡتَجِيبُواْ لَكُمۡ إِن كُنتُمۡ صَٰدِقِينَ﴾

7:194. நிச்சயமாக அல்லாஹ்வையன்றி எவர்களை நீங்கள் அழைக்கின்றீர்களோ, அவர்களும் உங்களைப் போன்ற அடிமைகளே; நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால் நீங்கள் அவர்களை அழைத்துப் பாருங்கள் - அவர்கள் உங்களுக்கு பதில் அளிக்கட்டும்!

அடக்கம் செய்யப்பட்டவர், அவர் இரட்சிப்பின் தரத்துக்கு உயர்த்தப்பட்டாலும் அவரை பிரார்த்திப்பவரை அவரால் கேட்க முடியாது, அவர், அவரிடம் இறைமைக்குரிய விசேட தன்மைகள் இருக்கின்றது என்று வாதிட்டாலும் கூட அவரிடம்

உதவி தேடுபவர்களுக்கு உதவி செய்ய எந்த ஒன்றையும் சொந்தமாகி கொள்ளவும் மாட்டார், அல்லாஹ் கூறுகின்றான்:

﴿وَٱلَّذِينَ تَدۡعُونَ مِن دُونِهِۦ مَا يَمۡلِكُونَ مِن قِطۡمِيرٍ ۝ إِن تَدۡعُوهُمۡ لَا يَسۡمَعُواْ دُعَآءَكُمۡ وَلَوۡ سَمِعُواْ مَا ٱسۡتَجَابُواْ لَكُمۡ﴾

35:13. அவனையன்றி நீங்கள் எவர்களை பிரார்த்தி(த்து அழை)க்கின்றீர்களோ, அவர்களுக்கு (கித்மீர்) அணுவளவு அதிகாரமும் இல்லை.

35:14. நீங்கள் அவர்களைப் பிரார்த்தி(த்து அழை)த்தாலும், அவர்கள் உங்கள் பிரார்த்தனையை (அழைப்பை)ச் செவியோற்காா்; செவியேற்றாலும் கூட உங்களுக்கு பதில் அளிக்கமாட்டார்கள்

கித்மீர் என்றால் பேரீச்சம்பழத்துக்கும் அதன் விதைக்கும் இடையில் உள்ள ஒரு தோல் துண்டாகும்.

இறந்தவர்கள் தமக்குத் தாமே உதவி செய்துகொள்வதற்கு சக்தியற்றவர்கள், ஆகவே அவர்கள் அடுத்தவர்களுக்கு உதவுவது என்பது அசாத்தியமானது, அல்லாஹ் கூறுகின்றான்:

﴿وَٱلَّذِينَ تَدۡعُونَ مِن دُونِهِۦ لَا يَسۡتَطِيعُونَ نَصۡرَكُمۡ وَلَآ أَنفُسَهُمۡ يَنصُرُونَ﴾

7:197. அவனையன்றி நீங்கள் யாரை பிரார்த்திக்கிறீர்களோ அவர்கள் உங்களுக்கு உதவி செய்யவும் தங்களுக்குத் தாங்களே உதவி செய்து கொள்ளவும் சக்தி பெற மாட்டார்கள்.

# இறந்தவரிடம் பிரார்த்திப்பவர், அவர் இவரை செவிமடுக்க மாட்டார் பயனளிக்கவும் மாட்டார் என்பதை உறுதியாக நம்புகின்றார்

அல்லாஹ் அல்லாதவர்களை அழைப்பவர்கள், அவர்களால் அழைக்கப்படுபவர்கள் கேட்கவும் மாட்டார்கள், பயனளிக்கவும் மாட்டார்கள் என்பதில் உறுதியாகவே உள்ளனர், இப்ராஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள், அவர்களது சமூகத்துக்கு சிலைகளைப் பற்றி கூறியதை அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகின்றான், அல்லாஹ் கூறுகின்றான்:

﴿قَالَ هَلۡ يَسۡمَعُونَكُمۡ إِذۡ تَدۡعُونَ ۞ أَوۡ يَنفَعُونَكُمۡ أَوۡ يَضُرُّونَ ۞

قَالُواْ بَلۡ وَجَدۡنَآ ءَابَآءَنَا كَذَٰلِكَ يَفۡعَلُونَ﴾

26:72. (அதற்கு இப்ராஹீம்) கூறினார்: "நீங்கள் அவற்றை அழைக்கும் போது, (அவை காதுகொடுத்துக்) கேட்கின்றனவா?

26:73. "அல்லது அவை உங்களுக்கு நன்மை செய்கின்றனவா; அல்லது தீமை செய்கின்றனவா? (எனவுங் கேட்டார்)

26:74. (அப்போது அவர்கள்) “இல்லை! எங்கள் மூதாதையர் இவ்வாறே (வழிபாடு) செய்ய நாங்கள் கண்டோம்” என்று கூறினார்கள்.

"அதாவது: அவர்களது சிலைகள் அதில் எந்த ஒன்றையும் செய்ய முடியாது என்பதை அவர்கள் ஏற்றிருந்தனர், என்றாலும் அவர்களின் மூதாதையர்கள் அவ்வாறு செய்வதை அவர்கள் கண்டதனாலையே அவ்வாறு செய்கின்றனர்[1]" என அல் இமாம் இப்னு கஸீர் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்.

[1] - இப்னு கஸீர்: 6/146

# இறந்தவர்களிடம் பிரார்த்திப்பது வெறும் களைப்பும் மார்க்கத்தைப் பழுதுபடுத்துவதுமாகும்

யார் ஓர் இறந்தவரிடம் ஒரு நன்மையை பெற்றுக்கொள்வதற்காகவோ, அல்லது ஓர் ஆபத்தை தடுத்துக் கொள்வதற்காகவோ விரும்பினால், அவர் அவரது மார்க்கத்தை பழுதாக்கிக் கொள்வதையும் கலைப்பையும் வேறு எந்த ஒன்றையும் அடைந்து கொள்ள மாட்டார், அல்லாஹ் கூறுகின்றான்:

﴿يَدْعُوا۟ مِن دُونِ ٱللَّهِ مَا لَا يَضُرُّهُۥ وَمَا لَا يَنفَعُهُۥ ۚ ذَٰلِكَ هُوَ ٱلضَّلَـٰلُ ٱلْبَعِيدُ ۞ يَدْعُوا۟ لَمَن ضَرُّهُۥٓ أَقْرَبُ مِن نَّفْعِهِۦ ۚ لَبِئْسَ ٱلْمَوْلَىٰ وَلَبِئْسَ ٱلْعَشِيرُ﴾

22:12. அவன், அல்லாஹ்வையன்றி, தனக்குத் தீங்கிழைக்க முடியாததையும், இன்னும் தனக்கு நன்மையும் செய்யாததையுமே பிரார்த்திக்கிறான் - இதுதான் நெடிய வழிகேடாகும்.

22:13. எவனது தீமை, அவனது நன்மையை விட மிக நெருங்கியிருக்கிறதோ அவனையே அவன் பிரார்த்திக்கிறான் - திடமாக (அவன் தேடும்) பாதுகாவலனும் கெட்டவன்; (அப்பாதுகாவலனை அண்டி நிற்பவனும்) கெட்ட தோழனே.

படைப்பினங்களைப் பிரார்த்தித்து, இறந்த மற்றும் உயிரோடு உள்ளவர்களிடம் உதவி தேடுகின்றவர்கள், அவர்கள் அவர்களையே கேவலப்படுத்திக் கொள்கின்றனர். "யா அல்லாஹ், அடுத்தவர்களுக்கு சுஜூது செய்வதை விட்டும் எனது முகத்தை காத்ததைப் போன்று, அடுத்தவர்களிடம் கேட்பதை விட்டும் என்னை காப்பாயாக, ஏனெனில் கஷ்டத்தை நீக்கி, பயனைத் தர உன்னைத் தவிர வேறு யாரும் சக்தி பெற மாட்டார்கள்" என அல் இமாம் அஹ்மத் (ரஹிம ஹுமுல்லாஹ்) அவர்கள் துஆ கேட்கக் கூடியவர்களாக இருந்தார்(1).

[1] - ஜாமிஉல் உலூமி வல்ஹிகம்: 1/481

# அல்லாஹ், கஷ்டத்தை நீக்கும்படி அவனல்லாதவர்களிடம் பிரார்த்திப்பவனை, அதைவிட ஒரு பெரும் கஷ்டத்தினால் தண்டிக்கின்றான்

ஓர் அடியான், அல்லாஹ் அல்லாதவர்களை அழைத்தால், அல்லது அவனது உள்ளம் அல்லாஹ் அல்லாதவர்களுடன் தொடர்புபட்டால், அல்லது அல்லாஹ் அல்லாதவர்களுடன் தொடர்புபடுவதை ஷைத்தான் அவனுக்கு தூண்டினால்- அவன் அழைப்பவன் சக்தியற்றவன் என்பதை அவன் அறியும் வரை, அவன் அழைப்பவன் பலவீனமானவன் என்பதை அவனுக்கு தெளிவுபடுத்தும் வரை, அவன் கஷ்டத்தையும் துன்பத்தையும் அனுபவிக்க வேண்டி வரும், அல்லாஹ் கூறுகின்றான்:

﴿قُلۡ أَرَءَيۡتَكُمۡ إِنۡ أَتَىٰكُمۡ عَذَابُ ٱللَّهِ أَوۡ أَتَتۡكُمُ ٱلسَّاعَةُ أَغَيۡرَ ٱللَّهِ تَدۡعُونَ إِن كُنتُمۡ صَٰدِقِينَ ۞ بَلۡ إِيَّاهُ تَدۡعُونَ فَيَكۡشِفُ مَا تَدۡعُونَ إِلَيۡهِ إِن شَآءَ وَتَنسَوۡنَ مَا تُشۡرِكُونَ﴾

6:40. (நபியே! அவர்களிடம்) நீர் கூறும்: “அல்லாஹ்வுடைய வேதனை உங்களிடம் வந்து விட்டால், அல்லது (நீங்கள் அஞ்சும்) அந்த (விசாரணைக்) காலம் வந்துவிட்டால் (அதிலிருந்து

உங்களைக் காப்பாற்ற) அல்லாஹ்வையன்றி (வேறு யாரையாவது) நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால் - அழைப்பீர்களா?” என்பதை (நீங்கள் சிந்தித்துப்) பார்த்தீர்களா?

6:41. “அப்படியல்ல! - அவனையே நீங்கள் அழைப்பீர்கள்; அப்போது அவன் எதற்காக அவனை அழைத்தீர்களோ அ(த் துன்பத்)தை தான் நாடினால் நீக்கிவிடுவான், இன்னும் (அவனுடன்) இணை வைத்திருந்தவற்றை நீங்கள் மறந்து விடுவீர்கள்.

யார், அல்லாஹ் தனித்து ஆட்சி செய்கின்றான், அவன் படைப்பினங்களில் தேவையற்றவன் என்பதை அறிகின்றாரோ, அவர் அவனிடமே பயன்பெற முயற்சிப்பார், இன்னும் அவன் மீது ஆதாரவும் வைப்பார். அல்லாஹ் கூறுகின்றான்:

﴿قُلِ ٱدۡعُواْ ٱلَّذِينَ زَعَمۡتُم مِّن دُونِ ٱللَّهِ لَا يَمۡلِكُونَ مِثۡقَالَ ذَرَّةٖ فِي ٱلسَّمَٰوَٰتِ وَلَا فِي ٱلۡأَرۡضِ وَمَا لَهُمۡ فِيهِمَا مِن شِرۡكٖ وَمَا لَهُۥ مِنۡهُم مِّن ظَهِيرٖ﴾

34:22. “அல்லாஹ்வையன்றி எவரை நீங்கள் (தெய்வங்களென) எண்ணிக் கொண்டிருக்கிறீர்களோ அவர்களை அழையுங்கள்; வானங்களிலோ, இன்னும் பூமியிலோ அவர்களுக்கு ஓர் அணுவளவும் அதிகாரமில்லை - அவற்றில் இவர்களுக்கு எத்தகைய பங்கும் இல்லை - இன்னும் அவனுக்கு உதவியாளர்களும் அவர்களில் யாருமில்லை.

# அல்லாஹ் அல்லாதவர்களை பிரார்த்திப்பவனின் மரணத்தின் போதுள்ள நிலைமை

அல்லாஹ்வுடன் சேர்த்து அல்லாஹ் அல்லாதவர்களை வணங்கக்கூடிய ஒருவருக்கு மரணம் நெருங்கும் போது அவர் செய்து கொண்டிருந்த விடயங்களிலிருந்து விலகிக் கொள்வார், அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ٱلَّذِينَ تَتَوَفَّىٰهُمُ ٱلۡمَلَٰٓئِكَةُ ظَالِمِيٓ أَنفُسِهِمۡۖ فَأَلۡقَوُاْ ٱلسَّلَمَ مَا كُنَّا نَعۡمَلُ مِن سُوٓءِۢ﴾

16:28. அவர்கள் தமக்குத் தாமே அநியாயம் செய்பவர்களாக இருக்கும் நிலையில், மலக்குகள் அவர்களுடைய உயிர்களைக் கைப்பற்றுவார்கள்; அப்போது அவர்கள், "நாங்கள் எந்தவிதமான தீமையும் செய்யவில்லையே!" என்று (கீழ்படிந்தவர்களாக மலக்குகளிடம்) சமாதானம் கோருவார்கள்

மறுமை நாளில் எல்லா மனிதர்களது இரு கண்களிலிருந்தும் திரை நீக்கப்படும், அப்போது படைப்பினங்களின் இயலாமையை தெளிவாக கண்டு கொள்வார்கள், இன்னும் அல்லாஹ் அல்லாது பிராத்திக்கப்பட்டவர்கள் நீங்கிக் கொள்வதையும் காண்பார்கள், அல்லாஹ் கூறுகின்றான்:

﴿حَتَّىٰٓ إِذَا جَآءَتۡهُمۡ رُسُلُنَا يَتَوَفَّوۡنَهُمۡ قَالُوٓاْ أَيۡنَ مَا كُنتُمۡ تَدۡعُونَ مِن دُونِ ٱللَّهِۖ قَالُواْ ضَلُّواْ عَنَّا﴾

7:37. எவன் அல்லாஹ்வின் மீது பொய்க்கற்பனை செய்து அவனுடைய வசனங்களையும் நிராகரிக்கிறானோ, அவனைவிட மிக அநியாயக்காரன் யார்? எனினும் அத்தகையவர்களுக்கு அவர்களுக்கு விதிக்கப்பட்ட (உணவும், பொருள்களிலுள்ள) பங்கு (இவ்வுலகில்) கிடைத்துக்கொண்டே இருக்கும்; நம்முடைய (வான) தூதர்கள் அவர்களிடம் வந்து, அவர்(களுடைய உயிர்)களைக் கைப்பற்றும் போது (அவ்வான தூதர்கள்) “அல்லாஹ்வை விட்டு எவர்களை அழைத்துக் கொண்டு இருந்தீர்களோ, அவர்கள் எங்கே?” எனக் கேட்பார்கள்; (அதற்கு) “அவர்கள் எங்களை விட்டுக் காணாமல் (மறைந்து போய்) விட்டார்கள்” என்று கூறுவார்கள். அதாவது: அவர்கள் எங்களை விட்டு சென்று விட்டனர் நாம் அவர்களது பயனையோ நலவையோ ஆதரவு வைக்கவில்லை. யார் அல்லாஹ் அல்லாதவர்களை பிரார்த்திக்கின்றாரோ அல்லாஹ் அவர் மீது கோபப்பட்டு அவரை நரகில் நீடூடி வாழச் செய்கிறான். "ஒருவர், அல்லாஹ் அல்லாத ஓர் இணையை அழைக்கக்கூடிய நிலையில் மரணித்தால் அவர் நரகம் செல்வார்" என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: புகாரி முஸ்லிம்).(1)

1 - இப்னு மஸ்ஊத் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களின் ஹதீஸ், புகாரி: 4497, முஸ்லிம்: 92

# அல்லாஹ் அல்லாதவர்களை பிரார்த்திப்பது ஷைத்தானின் மீது அன்பு வைப்பதாகும்

பிரார்த்தனை ஒரு உன்னதமான வணக்கம், அதன் மூலமாகவே ஒரு ஏகத்துவவாதி அடுத்தவர்களை விட்டும் வேறுபடுகின்றார், இன்னும் அதுவே, அடியார்களின் மார்க்கத்தை பழுதுபடுத்துவதற்கு ஷைத்தானுக்கு மிக எளிதான வழி. "இறந்தவர்களிடம் தேவைகளை நிறைவேற்றி தரம் படி வேண்டுவதும், அவர்களிடம் உதவி தேடுவதும், அவர்களை நாடுவதுமே உலகத்தில் ஏற்பட்ட இணைவைப்பின் அடிப்படையாகும்" என அல் இமாம் இப்னு கையிம் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் கூறுகின்றார்.(1)

ஒரு முஸ்லிம் அவனது உள்ளத்தையும் வணக்கத்தையும் கொடுக்கல் வாங்கல்களையும் அல்லாஹ்வுடன் மாத்திரமே தொடர்பு படுத்துவான், இன்னும் அறிவு, நாட்டம், அன்பு ஆகிய விடயங்களில் படைத்தவனுக்கும் படைக்கப்பட்டவனுக்குமிடையில் பிரித்துக் காட்டுவான், அதன் மூலமாக அவ்விருவருக்கும் உரிய கடமைகளையும்

---

1 - மதாரிஜுஸ்ஸாலிகீன்: 1/353

அந்தஸ்தையும் வழங்குவான், அவ்விருவரில் ஒருவருக்குரிய அந்தஸ்தை இன்னொருவருக்கு வழங்க மாட்டான்; அந்த அடிப்படையில் இரட்சகனே வணக்கத்துக்கும் பிரார்த்தனைக்கும் பயத்துக்கும் ஆதரவு வைப்பதற்கும் தகுதியானவன், நல்லடியார்கள், அன்புக்கும் கண்ணியத்திற்கும் புகழுக்கும் தகுதியானவர்கள், அல்லாஹ் கூறுகின்றான்:

﴿فَأَقِمۡ وَجۡهَكَ لِلدِّينِ حَنِيفٗاۚ فِطۡرَتَ ٱللَّهِ ٱلَّتِي فَطَرَ ٱلنَّاسَ عَلَيۡهَاۚ لَا تَبۡدِيلَ لِخَلۡقِ
ٱللَّهِۚ ذَٰلِكَ ٱلدِّينُ ٱلۡقَيِّمُ وَلَٰكِنَّ أَكۡثَرَ ٱلنَّاسِ لَا يَعۡلَمُونَ﴾

30:30. ஆகவே, நீர் உம்முகத்தை தூய (இஸ்லாமிய) மார்க்கத்தின் பக்கமே முற்றிலும் திருப்பி நிலைநிறுத்துவீராக! எ(ந்த மார்க்கத்)தில் அல்லாஹ் மனிதர்களைப் படைத்தானோ அதுவே அவனுடைய (நிலையான) இயற்கை மார்க்கமாகும்; அல்லாஹ்வின் படைத்தலில் மாற்றம் இல்லை; அதுவே நிலையான மார்க்கமாகும். ஆனால் மனிதரில் பெரும்பாலோர் (இதை) அறியமாட்டார்கள்.

# ஓரிறைக் கொள்கையே ஒரு மனிதன் சொந்தமாக்கிக் கொள்ளும் மிகப் பெருமதியான சொத்து

ஓர் அடியான் தனது இறைவனை ஒருமைப்படுத்துவது அவன் கொடுக்கப்பட்ட விடயங்களில் மிகப் பெறுமதியானது, அவன் மரணிக்கும் வரை அதே கொள்கையில் நிலைத்திருப்பது அவனுக்கு வழங்கப்பட்ட அருட்களில் மிக மேன்மையானது. இதில் குறைவான அளவிலாவது ஆரோக்கியமானதாக இருந்தால் நரகில் நிலைத்திருப்பதை விட்டும் பாதுகாக்கப்படுவான், அதில் முழுமையாக ஈடுபாடு காட்டினால் அது அவனை நரகில் நுழைவதை விட்டும் தடுக்கும்.

சைத்தான் அடியார்களை அவர்களது மார்க்கத்தில் இருந்து திசை திருப்புவதற்காக சந்தேகங்களையும் சூழ்ச்சிகளையும் உண்டு பண்ணுகின்றான், ஓர் அடியான் ஒரு சந்தேகத்திற்கு உட்படுத்தப்படுகின்ற போது அதை உண்மைப்படுத்துவதற்கும் அதை

பின்பற்றுவதற்கும் தூண்டக்கூடிய விடயங்கள் அதில் இருக்கும்.

யார் ஈடேற்றத்தை நாடுகின்றாரோ அவர் அவரது விசுவாசத்தையும் ஏகத்துவக் கொள்கையையும், அல்குர்ஆனை ஓதி, அதை சிந்தித்து, தேவையான அறிவைப் பெற்றுப் பாதுகாத்துக் கொள்ள முயற்சிப்பார், இன்னும் அவர் தன்னை சந்தேகத்திற்கு இடமான விடயங்களிலிருந்து தூரமாக்கிக் கொள்வார்.

அல்லாஹ்விடம், பயனுள்ள கல்வியையும், சாலிஹான அமலையும், அவனிடம் தூய்மையாக கேட்கப்படும் துஆவையும் கேட்கின்றோம்.

وصلى الله وسلم على نبينا محمد وعلى آله وصحبه أجمعين

# உள்ளடக்கம்

முன்னுரை.......................................................................... 5

வணக்கங்களை அல்லாஹ்வுக்காக மாத்திரம் தூய்மையாக நிறைவேற்றுவதே இஸ்லாத்தின் யதார்த்தம் ................................ 8

அல்லாஹ்விடம் மாத்திரம் பிரார்த்திப்பதிலேயே இஸ்லாம் தங்கியுள்ளது ............................................................. 11

அல்லாஹ்விடம் மாத்திரம் பிரார்த்திக்காமல்............................... 13

பிரார்த்தனையே வணக்கம் ................................................... 15

அல்லாஹ்வை மாத்திரம் பிரார்த்திப்பதன் முக்கியத்துவம்........... 17

அல்லாஹ்வை மாத்திரம் பிரார்த்திப்பது..................................... 19

அல்லாஹ் மாத்திரமே பிரார்த்தனைகளுக்கு விடையளிப்பவன்... 21

நபிமார்கள் அல்லாஹ்வை மாத்திரமே அழைப்பார்கள்............... 245

அல்லாஹ்வை மாத்திரம் பிரார்த்திப்பதால் கிடைக்கும் பயன்கள் 30

இறைவனை ஒருமைப்படுத்துபவனின் அடையாளங்களில் சில:.. 32

இறைத்தூதர்கள் எவரும் அவர்களை வணங்கும் படி ஏவவில்லை ................................................................................ 33

அல்லாஹ் அல்லாதவர்களைப் பிரார்த்திப்பதே ............................ 36

இறந்தவர் அவரைப் பிரார்த்திப்பவரை செவி மடுக்க மாட்டார் ..... 39

இறந்தவரிடம் பிரார்த்திப்பவர்> அவர் இவரை செவிமடுக்க மாட்டார் ................................................................................ 41

இறந்தவர்களிடம் பிரார்த்திப்பது வெறும் .................................... 43

அல்லாஹ்> கஷ்டத்தை நீக்கும்படி அவனல்லாதவர்களிடம்.......... 45

அல்லாஹ் அல்லாதவர்களை பிரார்த்திப்பவனின்........................... 47

அல்லாஹ் அல்லாதவர்களை பிரார்த்திப்பது .................................. 49

ஓரிறைக் கொள்கையே ஒரு மனிதன் சொந்தமாக்கிக் கொள்ளும் ........................................................................................... 51

வெளியீடு மற்றும் விநியோகத்திற்கான
தாலிபுல் இல்ம் நிறுவனம்

00966506090448




❖ துஆ என்பது ஒவ்வொரு முஸ்லிமுக்கும் மிக மகத்தான மிக முக்கியமான
ஒரு வணக்கமாகும், அதில் உளத்தூய்மை பேணுவது ஓர் அடியான்
கொண்டிருக்கக்கூடிய ஏகத்துவத்தில் அளவைத் தெளிவுபடுத்தும்.
அல்லாஹ், ஒர் அடியான் எல்லா நேரங்களிலும் அவனை அழைப்பதை
❖ விரும்புகின்றான், அடுத்தவர்களை அழைப்பவர்களை வெறுக்கின்றான்.
அல்லாஹ்வை மாத்திரம் அழைப்பது இறைத்தூதர்களினதும்
அல்லாஹ்வின் நல்லடியார்களினதும் வழிமுறையாகும்.
❖ அல்லாஹ் அல்லாத உயிருள்ளவர்களையும் மரணித்தவர்களையும்
அழைப்பது இணைவைப்பாகும், மற்றும் அதன் மூலமாக, அழைப்பவர்
❖ எப்பயனும் அடைய மாட்டார்.
அல்லாஹ்வுடன் இணைத்து அல்லாஹ் அல்லாதவர்களை அழைப்பதே
இவ்வுலகில் செய்யப்படுகின்ற மிகப்பெரும் பாவம்.
❖ ஓரிறைக் கொள்கையே ஒரு மனிதன் சொந்தமாக்கிக் கொண்டவற்றை
மிகப்பெருமதியானது, யார் பிரார்த்தனையில் இணை வைக்கின்றாரோ
❖ அவர் அக் கொள்கையை இழந்து விடுகின்றார்.

مترجم بالتاميلية

ردمك:

مؤسسة طالب العلم للنشر والتوزيع: ٠٥٠٦٠٩٠٤٤٨